SOP No.347/2022

RW.1

**30-11-2023 ஆம் தேதி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

நான் தேசியமயமாக்கப்பட்ட IOB வங்கியில் 1981 ல் பணிக்கு சேர்ந்தேன். 2020 மே-ல் நான் ஓய்வு பெற்றேன். நான் IOB ல் Senior Branch Manager ஆக பதவியில் இருந்தேன். நான் உடுமலைப்பேட்டை, கனியூர், கோட்டுர், அன்னூர், வதம்பச்சேரி, தஞ்சாவூர், கம்பம், ஒட்டன்சத்திரம், பொள்ளாச்சி ஆகிய ஊர்களில் பணியில் இருந்தேன். ஓய்வு பெற்ற பின்னர் நான் நிரந்தரமாக பொள்ளாச்சியில் வசித்து வருகிறேன். முதல் மனுதாரர் மின்சார வாரியத்தில் Executive Engineer ஆக பணி புரிந்து வந்தார். எனது தாயார் ஆனைமலையில் தட்டச்சு நிலையம் நடத்தினார் என்று காட்டுவதற்கு நான் ஆவண ஆதாரம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது தாயார் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை. எனது சகோதரி விஜயலட்சுமி M.E., Ph.D., படித்தவர் என்றால் சரிதான். நான் என்னுடைய பதில் மனுவில் எனது சகோதரி 2003 வரை வேலை தேடிக்கொண்டு இருந்ததாக குறிப்பிட்டு உள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் அவர் அந்த சமயத்தில் அமிர்தாவில் தற்காலிக பணியில் வேலையில் இருந்தார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பணி நியமன ஆணையின் அடிப்படையில் எனது சகோதரி ஜீன் 2001-லேயே நிரந்தர பணியில் விரிவுரையாளராக பணி அமர்த்தப்பட்டிருந்தார் என்று சொன்னால் எனக்கு நேரடியாக தெரியாது, இருக்கலாம். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். எனது மனைவி LIC ல் வேலை செய்கிறார். அவரும் வருமான வரி செலுத்தி வருகிறார். எனது சகோதரி வருமான வரி செலுத்தினாரா என்று எனக்கு தெரியாது. எனது சகோதரி கொரோனாவால் பாதிக்கப்பட்ட பிறகு அவரை மருத்துவமனையில் நான் தான் சேர்த்தேன்

என்பதை காட்டுவதற்கு மருத்துவ ஆவணங்கள் தற்போது என்னிடம் இல்லை. அதை நான் அப்போதே முதல் மனுதாரரிடம் கொடுத்து விட்டேன். நான் கூறுவது தவறு என்றும் எனது சகோதரியை அவரது கணவர் தான் மருத்துவமனையில் சேர்த்தார் என்று சொன்னால் சரியல்ல. கோயம்புத்தூரில் எனது சகோதரியின் வீட்டிற்கு அருகில் எனக்கும் சொந்தமாக வீடு உள்ளது என்று காட்டுவதற்கு ஆதாரமாக நான் ஆவண ஆதாரம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் தற்போதும் எனக்கு வீடு உள்ளது. அந்த வீட்டின் வாடகையை நான் எனது பெற்றோருக்கு கொடுத்து வந்தேன் என்று கூறுவதற்கு ஆதாரமாக வங்கி ரசீதுகள் என்னிடம் உள்ளதா என்றால் நான்அதை நேரடியாக கொடுத்து வந்தேன். நான் கூறுவது தவறு என்றும் எனக்கு கோயம்புத்தூரில் நான் கூறியவாறு சொந்தமாக வீடு எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை சுமார் 30 வருடத்திற்கு முன்பு ஓய்வு பெற்றிருப்பார். அப்போது நான் எந்த ஊரில் பணியில் இருந்தேன் என்று தற்போது எனக்கு நினைவில்லை. எனது தந்தை பூர்வீக சொத்துக்களை விற்று அதை வங்கியில் வைப்பீடு செய்திருந்தார் என்று கூறுவதற்கு ஆதாரமாக சொத்து விற்பனை ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் கூறுவது தவறு என்றும் எனது தந்தை பூர்வீக சொத்துக்களை விற்று வங்கிகளில் வைப்பீடு செய்யவில்லை என்றும் அவரது ஓய்வூதிய பலன்களை கொண்டு இரண்டு வைப்பீடுகளை வங்கியில் வைத்திருந்தார் என்றும் அதில் ஒன்றில் என்னை நாமினியாக காட்டியிருந்தார்கள் என்று சொன்னால் ஒரு வைப்பீடில் என்னை நாமினியாக போட்டிருந்தார்கள். ஆனால் அது ஓய்வூதிய வைப்பீடு இல்லை. மற்ற வைப்பீடுகள் அனைத்தும் எனது சகோதரியின் வருமானத்தில் இருந்து எனது பெற்றோர்கள் பெயரில் போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரி வசதிக்காகவும், சுலபமாக கையாள்வதற்கும் நம்பிக்கையின் அடிப்டையில் எனது பெற்றோர்கள் பெயரில் அவரது

வருமானத்தை வைப்பீடு செய்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது பெற்றோர்களின் வைப்பீடுகளில் ஒரு வைப்பீட்டில் என்னை நாமினியாக போட்டதை தவிர மற்றவைகளில் நான் நாமினியாக காட்டப்படவில்லை என்று சொன்னால் பெற்றோர்கள் எனது சகோதரியின் வீட்டிற்கு அருகே குடியிருந்த காரணத்தினாலும் நான் வங்கியில் பணி புரிந்து வந்த காரணத்தினாலும் நான் கூறியதற்கு இணங்க எனது பெற்றோர்கள் எனது சகோதரியை நாமினியாக காட்டினார்கள். வங்கி லாக்கர் எனது தாயார் மற்றும சகோதரியின் பெயரில் இருந்தது. அதில் எவ்வளவு நகைகள் இருந்தன என்று எனக்கு தற்போது நினைவில்லை. அந்த லாக்கர் either or survivor என்ற வகையில் இருந்தது என்று சொன்னால் சரிதான். எனது பெற்றோர்களை அவர்கள் வயதான காலத்தில் நான் சவரட்சனை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பெற்றோர்கள் உயிரோடு இருக்கும்போது அவர்கள் அவர்களது பெயரில் உள்ள வைப்பீட்டு தொகைகள் மகளுக்கு தான் சென்றடைய வேண்டும் என்று உறவினர்களிடம் கூறி வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த விருப்பத்தை தான் எனது பெற்றோர்கள் வங்கிகளிலும் கூறினார்கள் என்று சொன்னால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் RBI circular ஐ வங்கிகள் நடைமுறைப்படுத்தி உள்ளனவா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/மோகன்குமார்

ஒம்/ஜி.விஜயா,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.